THE TIMES OF INDIA
சமயம்

# தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு : என்னது.. அதிகாரிகளுக்கு பதவி உயர்வா? - கடுப்பான நீதிபதிகள்

Authored By எழிலரசன்.டி | Samayam Tamil | Updated: 10 Jan 2024, 6:08 pm



தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு தொடர்பான வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் முக்கியமான ஒரு கருத்தை முன்வைத்துள்ளது. தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக கடந்த 2018ஆம் ஆண்டு நடந்த போராட்டத்தின் போது காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 16 பேர் கொல்லப்பட்டனர் . தமிழகத்தையே உலுக்கிய இந்த விவகாரம் தொடர்பாக அருணா ஜெகதீசன் ஆணையம் விசாரித்து, காவல் அதிகாரிகள் உள்பட பலரின் மீது நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்தது.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக கடந்த 2018ஆம் ஆண்டு நடந்த போராட்டத்தின் போது காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 16 பேர் கொல்லப்பட்டனர்தமிழகத்தையே உலுக்கிய இந்த விவகாரம் தொடர்பாக அருணா . ஜெகதீசன் ஆணையம் விசாரித்து, காவல் அதிகாரிகள் உள்பட பலரின் மீது நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்தது.

இந்த நிலையில் துப்பாக்கிச் சூடு விவகாரம் பற்றி மனித உரிமைகள் ஆர்வலர் ஹென்றி திபேன் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்தார்அதில் ., தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக தாமாக முன்வந்து விசாரித்த தேசிய மனித உரிமைகள் ஆணையம், வழக்கை முடித்துவைத்துவிட்டதாகவும், புகார்தாரர் என்ற முறையில் தனது தரப்பு விளக்கத்தை கேட்கவில்லை என்றும் குறிப்பிட்டு இருந்தார்.

இவ்வழக்கு நீதிபதிகள் எஸ்சுந்தர் மற்றும் செந்தில் குமார் ஆகியோர் அடங்கிய .எஸ். அப்போது நீதிபதிகள் .அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது, “தாமாக முன்வந்து விசாரிக்க எடுத்த வழக்கை தேசிய மனித உரிமை ஆணையம் முடித்து வைத்தது நியாயமாஇழப்பீடு வழங்க உத்தரவிட்டதுடன் மனித .என்று கேள்வி எழுப்பினர் ” .உரிமை ஆணையத்தின் பணி முடிந்துவிடவில்லை என்றும் கருத்து தெரிவித்தனர்

**பதவி உயர்வா? - நீதிபதிகள் அதிருப்தி**

துப்பாக்கிச் சூடு குறித்து விசாரித்த அருணா ஜெகதீசன் ஆணையம் காவல் துறையினர், வருவாய் துறையினர், மாவட்ட நிர்வாகத்தினர் என பலரையும் குற்றம் சாட்டியுள்ளதாக குறிப்பிட்ட நீதிபதிகள், துப்பாக்கி சூடு சம்பவத்தில் தொடர்புடைய அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கியது தொடர்பாக கடும் அதிருப்தி தெரிவித்தனர்.

பதவி உயர்வு வழங்கியது தொடர்பாக விரிவான அறிக்கை தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், இந்த வழக்கில் தொடர்புடைய அதிகாரிகளின் பட்டியலையும் சமர்பிக்க அறிவுறுத்தினர்.

மேலும், மனித உரிமைகள் ஆணையம் வழக்கில், குற்றம் சாட்டடப்பட்ட அதிகாரிகள் தரப்பு விளக்கத்தை கேட்காமல் எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது என்பதால், அந்த அதிகாரிகளையும் எதிர் மனுதாரர்களாக இணைத்து கூடுதல் மனுக்கள் தாக்கல் செய்யவும் மனுதாரர் ஹென்றி திபேனுக்கு அறிவுறுத்தினர்இதனையடுத்து . வழக்கையும் வரும்19ஆம் தேதிக்கு தள்ளி வைத்தனர்.

https://tamil.samayam.com/latest-news/state-news/thoothukudi-gun-shoot-officials-promotion-high-court-dissatisfaction-and-question-to-tn-govt/articleshow/106702860.cms